**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண். 135/2022** **நாள். 03.06.2025**

2025-ம் ஆண்டு ஜுன் திங்கள் 03-ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 ராஜேந்திரன் த/பெ.பழனியப்பன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் டிப்ளமோ படித்துள்ளேன். எனக்கு பணம் தரவேண்டி என்பதற்கான இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்த அதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் பிராது மற்றும் என்னுடைய நிரூபண வ ாக்குமூலம் ஆகியவற்றை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் பைனான்ஸ்தொழில் செய்து வருகிறேன். எனக்கு 2 பைனான்ஸ் உள்ளது. எனது பைனான்ஸ் பாட்னர் பெயர்கள் எனக்கு ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். எனது பைானான்ஸ் 15 வருடங்களாக வேலூரில் உள்ளது. பாலாஜி பைனான்ஸ் மற்றும் முருகன் பைனான்ஸ் ஆகும்.

2) எனது பைனான்ஸில் பாலதண்டாயுதபாணி என்பவர் வரவு, செலவு வைத்துக்கொள்வது வழக்கம் என்றால் எனக்கு தெரியாது. பாலதண்டாயுதபாணியிடமிருந்து நான் சொத்து வாங்கவில்லை என்றால் சரிதான். பாலதண்டாயுதபாணி என்பவர் மூலம் தான் எனக்கு பிரதிவாதியை தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள குறிப்பாணையில் புரோநோட்டின் வருடம், மற்றும் இங் கலர் மாறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது சம்பந்தமாக நான் தாக்கல் செய்த ஆட்சேபணையிலும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் மறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் பிரதிவாதியின் சகோதரர் பாலதண்டாயுதபாணியிடம் ரூ.35,000/- பெற்று அதற்காக புரோநோட்டு எழுதிகொடுத்ததாகவும் அந்த புரோநோட்டை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆட்சேபணை செய்து என்னுடைய நிரூபண

வாக்குமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான்.

3. தாவா புரோநோட்டு என் வீட்டில் வைத்து 30.10.2019ம் தேதியில் காலை 8.30 மணிக்கு தனசேகர் என்பவர் எழுதினார். தற்போது மீண்டும் சாட்சி குமரேசன் என்பவர் தாவா பாண்டை எழுதியதாகவும், தனசேகரன் என்பவர் சாட்சி கையெழுத்து செய்ததாகவும் கூறுகிறார். தாவா புரோநோட்டில் ரூ.5 இலட்சம் கடன் பெற்றதாகவும், அதற்கு ரூ.100-க்கு ரூ.1 வட்டி என்றும் எழுதப்பட்டது. 2019ம் வருடம் பாலப்பட்டி என்ற கிராமம் மோகனூர் வட்டத்தை சேர்ந்தது என்றால் சரியல்ல. 2018ம் வருடத்திற்கு பின்பு பாலப்பட்டி என்ற கிராமம் மோகனூர் வட்டத்தை சேர்ந்தது என்று பிரிக்கப்பட்டது என்றாலும் ஆனால் நான் பழைய ஆவணத்தை வைத்து பரமத்தி வேலூர் வட்டம் என்று எழுதினேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி என்னிடம் நேரடியாக எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் அவரது சகோதரர் பாலதண்டாயுதபாணிக்கும் மன கசப்பை பயன்படுத்தி நானும், பாலதண்டாயுதபாணியும், சாட்சிகளும் சேர்ந்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பைனான்ஸில் உதயகுமார் என்பவர் பாட்னர் என்றால் சரியல்ல. உதயகுமார் என்பவருடன் ரியல்எஸ்டேட் செய்ததின் அடிப்படையில் அவர் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த சூழலிலும் என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும், பிரதிவாதிக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், அதனால் இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.06.03 15:15:55 +0530

Sub Judge,
Paramathy